**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(15.02.2023 முதல் 19.02.2023 )**

**அறிக்கைஎண் 013/2023** **தேதி.14.02.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 07°செ முதல் 9°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 10.02.23 முதல் 13.02.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 17°செ முதல் 19°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 67 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 18 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (10.02.2023 முதல் 13.02.2023) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 19.02.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10/01 | 11/02 | 12/02 | 13/02 | தேதி | நாள்-1 15/02 | நாள்-2 16/02 | நாள்-3 17/02 | நாள்-4 18/02 | நாள்-5 19/02 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 34 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 35 | 35 | 35 |
| 19 | 18 | 19 | 17 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 18 | 19 | 19 | 19 | 20 |
| 4 | 5 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டர்) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 67 | 52 | 52 | 45 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 70 | 60 | 70 |
| 20 | 21 | 18 | 20 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 11 | 8 | 9 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 8 | 10 | 8 | 4 |
| 70 | 90 | 90 | 90 | காற்றுவீசும் திசை | 20 | 70 | 70 | 90 | 90 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (15.02.2023 முதல் 19.02.2023)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக

திசையிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 15-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 16-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 17-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 18-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு் தெளிவான வானம் மற்றும்வறண்ட வானிலையுடன் காற்றின் வேகம் 4 - 10 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. வெப்பநிலை கடந்த வாரத்தினை விட கூடி வருகிறது.<br>வறண்ட வானிலை தொடர்வதால், மண் ஈரத்தினைப்பொறுத்து மாலையில் நீர் பாசனம் செய்யவேண்டும். பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் மண் ஈரத்தினைப் பாதுகாக்கலாம்.<br>வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்த தானியங்களை காயவைத்து தக்க முறையில் சேமிக்கவும். |
| நெல் | அறுவடை | அதிகபட்ச வெப்பநிலை 34° செல்சியஸ் ஆக இருப்பதால் அறுவடை செய்த சம்பா நெல் மணிகளை காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும் மற்றும் மதியம் 3 மணி முதல் 5 மணி வரை உலர்த்தவும். |
| எள் | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் எள் விதைப்பினை பிப்ரவரி 15 முதல் மேற்கொள்ளலாம்.<br>கோடை கால இறவை எள் சாகுபடியில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சேடை நீர்ப் பாசனம் செய்து எள் விதைப்பபை மேற்கொள்ளவும். |
| கரும்பு | நடவு | வறண்ட வானிலை நிலவுவதால் கரும்பில் இளங்குருத்து புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வயலை நன்கு ஈரமாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்த தாக்குதலை குறைக்கலாம். மேலும் பயிர் மூடாக்கு செய்வதன் மூலமும் இந்த தாக்குதல் குறைவதோடு மட்டும் அல்லாமல் நீர் தேவையையும் குறைக்கலாம். |
| வாழை | | மேற்கு வேளாண் மண்டலத்தில் வறண்ட காற்றானது 6 – 12 கி.மீ வரை வீச வாயப்புள்ளதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு போதிய முட்டுகொடுக்கவேண்டும்.<br>வாழையில் சில இடங்களில் வாடல் நோய் காணப்படுகிறது. நோய் அதிகமாக பாதித்திருந்த மரத்தை அகற்றி விட்டு சுண்ணாம்பு இடவும். மேலும் வாழைத்தண்டு 45 டிகிரி கோணத்தில் 10 செ.மீ துளை எடுத்து அதில் 60 மி.கிராம் கார்பன்டசிம் மாத்திரை அல்லது கார்பன்டசிம் 2 சத நீரை 3 மில்லி அல்லது 50 மில்லி கிராம் சூடோமோனாஸ் ப்ளோரோசென்ஸ் உயிர் பூஞ்சான கொல்லியை கொண்டு நிரப்பவும். இந்த முறையை 2, 4 மற்றும் 6 வது மாதங்களில் |

| | | |
|---|---|---|
| | | தாக்குதலை குறைக்கும். |

| | | |
|---|---|---|
| கொடி வகை காய்கறி | பூக்கும் பருவம் | பெண் பூக்களை அதிகரிக்க கொடி வகை காய்கறி பயிரில் எத்ரல் 100 பிபிஎம் அதாவது 10 லிட்டர் தண்ணீரில் 1மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் பட்டத்தில் தெளிக்கவும். |
| மஞ்சள் | அறுவடை | நிலவும் வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு அறுவடை செய்த மஞ்சள் கிழங்கினை பதப்படுத்தி சந்தைப்படுத்தவும். |
| மரவள்ளி கிழங்கு | கிழங்கு பருக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் மரவள்ளி கிழங்கில் வெள்ளை ஈ தாக்குதல் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் மஞ்சள் ஒட்டு பொறி வைத்து 5 அல்லது 6 இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் டையோசோபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி அல்லது இமிடாகுளோரோபிட் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.6 மில்லி வீதம் கலந்து தெளிக்கவும். |
| கால்நடைகள் | | வறண்ட வானிலையை கருத்தில் கொண்டு சுத்தமான குடிநீரை போதுமான அளவு கால்நடை மற்றும் கோழிகளுக்கு கொடுக்கவும். |

## குறுஞ்செய்தி

- வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் எள் விதைப்பினை பிப்ரவரி 15 முதல் மேற்கொள்ளலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**